# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்திய விண்வெளி வரலாற்றில் முதல்முறையாக, தனியார் நிறுவனத்தின் உள்நாட்டு தயாரிப்பான 'விக்ரம்-1' ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்ட 16-ஆவது நிமிஷத்தில் வெற்றிகரமாக புவியின் தாழ் வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

   i. விண்வெளி ஆய்வு நடவடிக்கைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், இஸ்ரோவின் கீழ் இயங்கும் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (இன்ஸ்பேஸ்) அமைப்பு, தெலங்கானா மாநிலம், ஹைதராபாதைச் சேர்ந்த 'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' என்ற தனியார் நிறுவனத்துக்கு ராக்கெட் தயாரிப்புக்கான ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, ‘பிராரம்ப்' என்ற பெயரிலான திட்டத்தின் கீழ் இந்த நிறுவனம் சார்பில் 3 விதமான ராக்கெட்டுகள் வடிவமைக்கப்பட்டன. அவற்றுக்கு இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தையான மறைந்த விஞ்ஞானி விக்ரம் சாராபாய் நினைவாக 'விக்ரம்' எனப் பெயரிடப்பட்டது.

   ii. இந்தச் சூழலில் கடந்த 2022- ஆம் ஆண்டு சோதனை முயற்சியாக 'விக்ரம் - எஸ்' ராக்கெட் விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 350 கிலோ எடையை சுமந்து செல்லும் திறன் கொண்ட ‘விக்ரம்-1' ராக்கெட்டை அந்த நிறுவனம் வடிவமைத்தது. சிறிய மற்றும் நடுத்தர செயற்கைக்கோள்களை புவியின் தாழ்வட்டப்பாதையில் நிலைநிறுத்தும் வகையில் இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முழுவதும் உள்நாட்டு தயாரிப்பாகும்.

   iii. 35 நிமிஷங்கள் தாமதம்:

   ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து 'மிஷன் ஆகமன்' என்ற பெயரில் விக்ரம்-1' ராக்கெட் சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு விண் ணில் செலுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், சிறிய தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 35 நிமிஷங்கள் 30 விநாடி தாமதமாக பிற்பகல் 12.05.30 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. எனினும், தரையிலிருந்து புறப்பட்ட 16-ஆவது நிமிஷத்தில், இந்த சிறிய மற்றும் நடுத்தர செயற்கைக்கோள்கள் 450 கி.மீ. தொலைவில்

திட்டமிட்டப் படி புவியின் தாழ் வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. இதையடுத்து இந்தத் திட்டம் வெற்றி பெற்றதாக விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

iv. புதிய தொழில்நுட்பங்கள்: ‘

- ‘விக்ரம்-1' ராக்கெட் 24 மீட்டர் உயரமும் 350 கிலோ எடையும் கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் வகையில் உருவாக்கப்பட்டது. இது முழுவதும் கார்பன் கலவைப் பொருளால் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல் 100 சதவீதம் என்ஜின்கள் முப்பரிமாண (3டி) அச்சுத் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால், ராக்கெட்டின் எடை குறைக்கப்பட்டதுடன், செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையும் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த ராக்கெட்டில் 'காஸ்மோ சர்வ் ஸ்பேஸ்' நிறுவனத்தின் 'எம்ப் ரேஸ்' என்ற பெயரில் ரோபோ கரங்களுடன் விண்வெளியில் மிதக்கும் கழிவுகளை அகற்றும் திறன் கொண்ட பரிசோதனைக் கருவியும், விண்வெளி தொழில்நுட்பங்களின் செயல்களை சோதனை செய்யும் ஜெர்மனி நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவியும் அனுப்பப்பட்டது. மேலும், எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்கான புதிய தொழில்நுட்பங்களைப் பரிசோதிப்பதற்காக 'ஸ்கை ரூட் ஏரோஸ்பேஸ்' நிறுவனம் உருவாக்கிய 'ஸ்கோப்' ஆய்வுக்கலனும், பூமியின் தாழ்வான சுற்றுப்பாதையில் புதிய தொழில்நுட்ப திறன்களை சோதிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ‘கிரஹா ஸ்பேஸ்' நிறுவனத்தின் சிறிய ஆய்வுக்கலன் ஆகியவையும் அனுப்பப்பட்டுள்ளன. இவை இந்தியாவை சேர்ந்த நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- 'காஸ்மோஸ் அதனுடன், டைமண்ட்ஸ்' ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட செயற்கை வைரமும், 18 காரட் தங்கத்தில் உருவாக்கப்பட்ட சிறிய ராக்கெட்டில், இந்திய விண்வெளித் திட்டத்தின் முன்னோடிகளான டாக்டர் விக்ரம் சாராபாய், சர் சி.வி.ராமன், டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஆகியோரின் நுண்ணிய சிற்பங்களும் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளன.
- இந்நிகழ்வில் இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், ஆந்திர மாநில தொழில்நுட்பத் துறை அமைச்சர் நாரா லோகேஷ், இன்-ஸ்பேஸ் தலைவர்

பவன் குமார் கோயங்கா, சதீஷ் தவன் விண்வெளி மையத்தின் இயக்குநர் எஸ்.முத்துசெழியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

v. நாட்டின் முதல் தனியார் ராக்கெட்டான விக்ரம்-1 மூலம் செயற்கைக்கோள்கள்-பரிசோதனைக் கருவிகளுடன் பிரதமர் மோடி எழுதிய அஞ்சல் அட்டையும் விண்ணை எட்டியது.

vi. ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் நிறுவனர்கள் - பவன்கு மார் சந்தனா, நாக பாரத் தாகா.

vii. விக்ரம் 1' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டதையடுத்து இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அடுத்த 2 மாதங்களில் இஸ்ரோ சார்பில் அடுத்த ராக்கெட் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. நிகழ் நிதியாண்டில் குறைந்தது 6 முதல் 7 ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளோம். இதில் 2 ராக்கெட்டுகள் ஏற்கெனவே தயாரிப்புப் பணிகள் நிறைவடைந்து, சோதனைகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த 5 ராக்கெட்டுகள் தயாரிக்கும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் இந்தியாவின் 2-ஆவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் நிகழாண்டிலேயே நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சில காரணங்கள் இந்தப் பணிகள் நீட்டிக்கப்பட்டு அடுத்த ஆண்டு மார்ச் இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

2. ஜூலை 20-ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர், ஆகஸ்ட் 13- ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. அண்மையில் மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட சில அவசர சட்டங்களுக்கு மாற்றான மசோதாக்கள், இந்தக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

i. முக்கியமாக, வருமான வரி சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட உள்ளது. ரூபாயின் மீதான அழுத்தத்தைச் சமாளிப்பதற்காக வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கும் நோக்கில், அரசுப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் மூலதன ஆதாயங்கள் மீதான வருமான வரியிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விலக்கு அளித்து பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றாக இந்த மசோதாகொண்டுவரப்படுகிறது. உச்சநீதிமன்ற நீதிபதிகளின்

எண்ணிக்கையை 38-ஆக உயர்த்தி பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதாவும் அறிமுகப்படுத்தப்படும்.

ii. தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டத் திருத்த மசோதா, பிறப்பு இறப்பு பதிவுச் சட்ட திருத்த மசோதா உள்ளிட்டவையும் தாக்கலாக உள்ளன.

iii. மீண்டும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா?

- 2029 மக்களவைத் தேர்தலில் இருந்து 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 850 வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா, கடந்த ஏப்ரலில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் கொண்டுவரப்பட்டது.
- அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற மொத்த உறுப்பினர்களின் (543) எண்ணிக்கையில் 50 சதவிதத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும் பான்மை வாக்குகளும் தேவை.
- ஆனால், மசோதா மீதான வாக்கெடுப்பில் வாக்குகள் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை கிடைக்கப் பெறாததால் தோல்வியடைந்தது.
- சமீபத்திய பேரவைத் தேர்தல்களுக்குப் பிறகு அரசியல் சூழல் மாறியுள்ள நிலையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. எனினும், அரசின் பட்டியலில் இந்த மசோதா இடம்பெற வில்லை.

3. தமிழ்நாடு நாளையொட்டி, முதல்வர் ஜோசப் விஜய் வாழ்த்து தெரிவித்தார். மேலும், மாநிலம் உருவான நவ. 1- ஆம் தேதி அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

4. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான கூட்டணி அரசின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து, அந்நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வரும் அக். 27-இல் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

i. இஸ்ரேல் அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றம் தனது முழு 4 ஆண்டு பதவிக்காலத்தையும் நிறைவு செய்வது மிகவும் அரிதான ஒன்றாகும். இதற்கு

முன்னதாக 1988-இல் தான் இஸ்ரேல் அரசு முழு பதவிக்காலத்தையும் நிறைவு செய்தது.

ii. கடந்த 2023 அக்டோபரில் ஹமாஸ் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, காஸாவில் கடந்த 3 ஆண்டுகளாக இஸ்ரேல் போரிட்டு வருகிறது. இதனிடையே, அமெரிக்காவுடன் இணைந்து ஈரானுக்கு எதிரான போரிலும் இஸ்ரேல் ஈடுபட்டது.

iii. இந்த நெருக்கடி சூழலில், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள போராடி வருகிறார். எனினும், தற்போதைய கருத்துகணிப்புகள், எதிர்க்கட்சிகளுக்கே ஆதரவு அலை இருப்பதை வெளிப்படுத்துகின்றன.

iv. மசோதாக்களை பாக, வரும் தேர்இதையொட்டி, நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முந்தைய கடைசி வாரத்தில், பெஞ்சமின் நெதன்யாகு அரசு பல்வேறு சர்ச்சைக்குரிய அவசர அவசரமாக நிறைவேற்றியது. குறிப் தலில் தீவிர ஆர்த்தடாக்ஸ் யூதக் கட்சிகளின் ஆதரவை உறுதி செய்வதற்காக, அச்சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டாய ராணுவச்சேவையில் இணைவதிலிருந்து விலக்கு அளிக்கும் முக்கிய மசோதாவும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

5. கனடாவில் தீவிரமடைந்து வரும் காட்டுத்தீ காரணமாக பல்வேறு வட அமெரிக்க நகரங்களில் காற்றின் தரம் மிக மோசமான நிலையை எட்டியுள்ளது.

i. தற்போதைய நிலவரப்படி, கனடாவில் 858 இடங்களில் காட்டுத்தீ எரிந்து வருவதாகவும், அதில் 111 இடங்களில் தீ இன்னும் கட்டுப் பாட்டுக்குள் வரவில்லை என்றும் அரசுத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, அமெரிக்காவின் மத்திய மேற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகள் வரை அடர்ந்த நச்சுப் புகைமூட்டம் பரவியுள்ளது.

ii. உலகின் மிக மோசமான காற்று மாசுபாடு கொண்ட முக்கிய நகரங்களின் பட்டியலில் அமெரிக்காவின் டெட்ராய்ட், சிகாகோ, நியூயார்க் மற்றும் மினியாபோலிஸ் ஆகிய நகரங்கள் முன்னணியில் உள்ளன.

iii. சாதாரண காற்று மாசு பாட்டை விட இந்த காட்டுத்தீ புகை அதிக நச்சுத்தன்மை வாய்ந்தது

iv. என்று மருத்துவ ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

v. இந்த நச்சுப் புகை வான்வெளியில் பல வாரங்களுக்கு நீடிக்கக் கூடும்

என்பதால், பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

vi. இச்சூழலில், கனடா தனது காடுகளைச் சரியாகப் பராமரிக்காததே இந்த அவலநிலைக்குக் காரணம்' என்று அந்நாட்டு அரசை அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையாகச் சாடினார்.

6. பிடபிள் யுஎஃப் வேர்ல்ட் டூர் ஜப்பான் ஓபன் சூப்பர் 750 பாட்மின்டன் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து முதன்முறையாக இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். அவர் உலக சாம்பியன் ஜப்பானின் அகேன் யெமகுச்சியுடன் மோதவுள்ளார்.

7. பிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் ஆர்ஜென்டீனாவும்-முன்னாள் சாம்பியன் வா ரோஜா ஸ்பெயினும் மோதுகின்றன.

i. 4-ஆவது முறையாக வெல்ல தீவீரம்

- அதிகபட்சமாக பிரேஸில் 5 முறை உலகக் கோப்பை பட்டம் வென்றுள்ளது. அதற்கு அடுத்து ஜெர்மனி, இத்தாலி ஆகியவை தலா 4 முறை வென்றுள்ளன. தற்போது 3 முறை சாம்பியன் ஆன ஆர்ஜென்டீனா 4-ஆவது முறையாக பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ளது.

ii. பிஃபா உலகக் கோப்பை கால்பந்து 96 ஆண்டுகள் வரலாற்றில் முதன்முறையாக சாம்பியன் அணி வீரர்களுக்கு தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

- வட அமெரிக்க கண்டத்தில் போட்டிகளில் பட்டம் வெல்லும் அணியினருக்கு மோதிரம் வழங்குவது 19-ஆம் நூற்றாண்டில் காணப்பட்டது. இறுதியில் வெல்லும் அணிக்கு 30 தங்க மோதிரங்கள் வழங்கப்படும் உலகக் கோப்பை வழங்கப்பட்டாலும், சாம்பியன் அணியை தனியாக மேலும் அடையாளப்படுத்த மோதிரம் தரப்படுகிறது மொத்தம் 2026 மோதிரங்களை செய்யப்படுகிறது. இதில் 30 மோதிரங்கள் சாம்பியன் அணிக்கு தரப்படும். மீதமுள்ள மோதிரங்கள் ரசிகர்களுக்கு விற்கப்படும்.

iii. நியூயார்க் நகரில் உள்ள மெட்லைஃப் மைதானத்தில் பிஃபா உலகக் கோப்பை கால்பந்து இறுதி ஆட்டம் நடைபெறுகிறது. மொத்தம் 48 அணிகளுடன் 104

ஆட்டங்கள் இந்த உலகக் கோப்பையில் இடம்பெற்றன.

- ஆர்ஜென்டீனா-ஸ்பெயின் இறுதி ஆட்டத்துக்கு முன்னரே இந்த மைதானத்தில் 7 ஆட்டங்கள் நடைபெற்றன இறுதி ஆட்டத்துக்கு முன்னர் கோல்ட் பிளேஸ் கிறிஸ் மார்ட்டின் நிகழ்ச்சி, மடோன்னா, ஷகிரா, பிடிஎஸ். ஜஸ்டின் பைபர். குஸ்டவோ டுடாமெல் ஆகியோரின் நிகழ்ச்சிகள் நடைபெறும்.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப். பிஃபா தலைவர் ஜியானி இன்ஃபேன்டினோ ஆகியோர் சாம்பியன் அணிக்கு பரிசளிக்கின்றனர்.

iv. 2010-இல் 1.6 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் கட்டப்பட்டது. மெட்லைஃப் மைதானத்தில் புல் தரை பெரும்பாலான வீரர்களுக்கு அதிருப்தியே அளித்துள்ளது. தரையின் பரப்பு மிகவும் கடினமாக இருப்பதாக தெரிவித்தனர். ஏற்கெனவே இங்கு மெஸ்ஸி 2012. 2016, 2024-இல் ஆடியுள்ளார். ஸ்பானிஷ் கேப்டன் ரோட்ரி ஹெர்னான்டஸ் முதன்முறையாக ஆடுகிறார்.

8. 'ககன்யான்' லட்சியத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஶ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்சிடிஐஎம்எஸ்டி) மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) மனித விண்வெளிப் பயண மையம் (ஹெச்எஸ்எஃப்சி) இணைந்து உயிரி விண்வெளி அறிவியல் ஆய்வை மேற்கொள்ளவுள்ளது.

i. சுகன்யான் திட்டத்தின்கீழ் மனிதர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ள நிலையில், அங்கு நுண்ணீர்ப்பு விசை, கதிர்வீச்சு மற்றும் தனிமையை எதிர்கொள்ள விண்வெளி வீரர்களை தயார்படுத்தும் விதமாக இந்த ஆய்வு நடைபெறவுள்ளது.

ii. இதுகுறித்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் செயல்படும் எஸ்சிடிஐஎம்எஸ்டி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'விண்வெளிக்குப் பயணிக்கும் மனிதர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் உயிரி விண்வெளி அறிவியல் ஆய்வை ஹெச்எஸ்எஃப்சி மற்றும் எஸ்சிடிஐஎம்எஸ்டி இணைந்து நடத்தவுள்ளது. இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்வெளி வீரர்களுக்கு இரு ஆண்டுகள் பயிற்சியை இரு நிறுவனங்களும் இணைந்து வழங்கவுள்ளது. விண்வெளிப் பயணத்தின்போது மனிதனின் உடலில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் பாதிப்புகளை முழுமையாக தெரிந்து கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய

நோக்கமாகும்.

iii. ஜூலை 2026-இல் தொடங்கி ஒவ்வொரு கல்வியாண்டும் 2 பேர் இந்தப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படுவர். இதுதொடர்பான அனைத்து தகவல்களும் எஸ்சிடி ஐஎம்எஸ்டி வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது' எனத்தெரிவிக்கப்பட்டது.

iv. முன்னதாக இஸ்ரோவின் பல்வேறு மனித விண்வெளிப் பயணத் திட்டங்களுக்காக விண்வெளி மருத்துவ ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை வலுப்படுத்த உயிரி விண்வெளி அறிவியல் ஆய்வுபுரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எஸ்சிடிஐஎம்எஸ்டியும் ஹெச் எஃப்எஸ்சியும் கடந்தாண்டு ஏப்ரல் 24-ஆம் தேதி கையொப்பமிட்டன. இதன் தொடர்ச்சியாக விண்வெளி மருத்துவ ஆய்வுக்கான மையம் எஸ்சிடிஐஎம்எஸ்டியில் கடந்த ஆண்டு நவம்பர் 26- ஆம் தேதி திறக்கப்பட்டது.

v. அதன்பிறகு பெங்களூரில் உள்ள இஸ்ரோ தலைமையகத்தில் இந்த ஆய்வுத் திட்டத்தை அமல்படுத்துவத்கான ஒப்பந்தத்தில் 2026, ஜூன் 25-ஆம் தேதி இரு அமைப்புகளும் கையொப்பமிட்டன.

### 9. அரசு கூட்டுறவு நிறுவனமான 'ஆவின்' கொள்முதல் விலையை உயர்த்தாததால் தமிழக பால் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி.

(i) உற்பத்தி மற்றும் சந்தை புள்ளிவிவரங்கள்

- தமிழகத்தில் 30 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்; குடும்பச் செலவுகளைச் சமாளிக்கப் பெண்கள் பெரும்பாலும் இச்செயல்பாடுகளை நிர்வகிக்கின்றனர்.
- மாநிலம் தினமும் சுமார் 3 கோடி லிட்டர் பாலை உற்பத்தி செய்கிறது.
- உற்பத்தியாளர்கள் 45 லட்சம் லிட்டரைத் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்கிறார்கள்.
- 2.55 கோடி லிட்டர் பால் விற்பனைக்காகச் சந்தைக்கு வருகிறது.
- சந்தைப் பங்கு:

1. ஆவின்: தினமும் சுமார் 37 லட்சம் லிட்டரை கொள்முதல் செய்கிறது.
2. தனியார் துறை: மீதமுள்ள 2.18 கோடி லிட்டரை கொள்முதல் செய்கிறது; இதில் பெரிய நிறுவனங்கள் 68 லட்சம் லிட்டரையும், உள்ளூர் சிறு வர்த்தகர்கள்/நிறுவனங்கள் சுமார் 1.50 கோடி லிட்டரையும் கொள்முதல்

செய்கின்றன.

(ii) விலை நிர்ணய வரலாறு மற்றும் ஒப்பீடு

- விலை உயர்வு வரலாறு:
- ஆகஸ்ட் 2019-ல், முந்தைய அரசு பசும்பாலுக்கு ₹4-ம், எருமைப்பாலுக்கு ₹6-ம் விலையை உயர்த்தியது.
- நவம்பர் 2022-ல், அடுத்ததாக வந்த அரசு இரண்டிற்கும் லிட்டருக்கு ₹3 வீதம் விலையை உயர்த்தியது.
- டிசம்பர் 2023-ல், லிட்டருக்கு ₹3 ஊக்கத்தொகை அறிமுகப்படுத்தப்பட்டது; ஆனால் அதன்பிறகு கொள்முதல் விலையில் முறையான உயர்வு எதுவும் செய்யப்படவில்லை.
- பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் கொள்முதல் விலை கணிசமாகக் குறைவாக உள்ளது:

1. பஞ்சாப்: லிட்டருக்கு ₹65 (சமீபத்தில் ₹60-லிருந்து உயர்த்தப்பட்டது).
2. மத்தியப் பிரதேசம்: லிட்டருக்கு ₹50.
3. கேரளா: லிட்டருக்கு ₹45.

- ஆவின் vs. தனியார் துறை: 4.3% கொழுப்பு மற்றும் 8.2% பிற சத்துக்கள் கொண்ட பாலுக்கு, தனியார் நிறுவனங்கள் லிட்டருக்கு ₹45 வழங்குகின்றன; ஆனால் ஆவின் லிட்டருக்கு ₹35 மட்டுமே வழங்குகிறது.

(iii) பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரிக்கும் செலவுகள்

- ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்ய குறைந்தபட்சம் ₹61 செலவாகிறது.
- கடந்த நான்கு ஆண்டுகளில், பல்வேறு வகையான தீவனங்களின் (வைக்கோல், சோளத்தட்டை, பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனம்) விலை 30% முதல் 40% வரை உயர்ந்துள்ளது.
- பால் பண்ணைத் துறையில் தொழிலாளர் கூலி 100% வரை அதிகரித்துள்ளது.
- உள்ளூர் சிறு வியாபாரிகள் பெரும்பாலும் விவசாயிகளின் இருப்பிடத்திற்கே நேரடியாகச் சென்று, ஒரு லிட்டருக்கு ₹32 என்ற குறைந்த விலையில் பாலைக் கொள்முதல் செய்கின்றனர்.

(iv) விவசாயிகள் மீதான தாக்கம் மற்றும் துறை சார்ந்த இடர்பாடுகள்

- தனியார் கொள்முதல்தாரர்களுடன் ஒப்பிடுகையில் ₹8 விலை வித்தியாசம் இருப்பதால், ஆவின் நிறுவனத்திற்குப் பால் வழங்கும் விவசாயிகள் நாளொன்றுக்கு மொத்தம் ₹2.96 கோடி இழப்பைச் சந்திக்கின்றனர்.

- உற்பத்திச் செலவைக் கணக்கில் கொண்டால், ஆவின் நிறுவனத்திற்கு விற்கும்போது ஒரு லிட்டருக்கு ₹24-ம், உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்கும்போது ஒரு லிட்டருக்கு ₹33-ம் விவசாயிகளுக்கு இழப்பாகிறது.
- தொடர்ச்சியான இந்த நிதி இழப்பு காரணமாகப் பல விவசாயிகள் பால் உற்பத்தியைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்; இது மாநிலத்தின் பால் விநியோக அமைப்பே முழுமையாகச் சீர்குலைய வழிவகுக்கக்கூடும்.

(v) கோரிக்கைகளும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளும்

- பசுப் பாலுக்கு ₹45-ம், எருமைப் பாலுக்கு ₹60-ம் கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும், அதனுடன் ₹12 ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.
- ஆவின் நிறுவனம் கொள்முதல் விலையை உயர்த்தினால், தனியார் நிறுவனங்களும் சிறந்த விலையை வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்; இது லட்சக்கணக்கான குடும்பங்களுக்குப் பயனளிப்பதோடு, விவசாயிகள் ஆவின் நிறுவனத்திற்கு அதிக அளவில் பால் வழங்கவும் ஊக்கமளித்து, அந்நிறுவனத்தை லாபம் ஈட்டும் அமைப்பாக மாற்றவும் வாய்ப்பளிக்கும்.
- தற்போது மாநிலத்தில் 32 ஒன்றியங்களின் கீழ் 12,000 பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விலை தொடர்பான இக்கவலைகளை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்; முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு இக்கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.